05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

# MITOS AGAMA KRISTIAN DALAM SAJAK MODEN A.S. FRANCIS

## ஏ.எஸ்.பிரான்சிஸ் புதுக்கவிதைகளில் கிறிஸ்துவத் தொன்மம்

**INDHRAN A/L ANANDAN**

**இந்திரன் த/பெ ஆனந்தன்**

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

**UNIVERSITI PENDIDIKAN SULTAN IDRIS**

**2019**

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

# MITOS AGAMA KRISTIAN DALAM SAJAK MODEN A.S. FRANCIS

## ஏ.எஸ். பிரான்சிஸ் புதுக்கவிதைகளில் கிறிஸ்துவத் தொன்மம்

**INDHRAN A/L ANANDAN**

**இந்திரன் த/பெ ஆனந்தன்**

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

**DISERTASI DIKEMUKAKAN BAGI MEMENUHI SYARAT UNTUK MEMPEROLEH IJAZAH SARJANA SASTERA (KESUSASTERAAN TAMIL (MOD PENYELIDIKAN)**

**FAKULTI BAHASA DAN KOMUNIKASI**
**UNIVERSITI PENDIDIKAN SULTAN IDRIS**

**2019**

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



UNIVERSITI PENDIDIKAN SULTAN IDRIS
SULTAN IDRIS EDUCATION UNIVERSITY

Sila tanda (√)
Kertas Projek
Sarjana Penyelidikan ✓
Sarjana Penyelidikan dan Kerja Kursus
Doktor Falsafah

**INSTITUT PENGAJIAN SISWAZAH**

**PERAKUAN KEASLIAN PENULISAN**

Perakuan ini telah dibuat pada 17 (hari bulan) 07 (bulan) 2019

**i. Perakuan pelajar :**

Saya, INDHRAN A/L ANANDAN (M20922001788) F. BHS. KOMUNIKASI (SILA NYATAKAN NAMA PELAJAR, NO. MATRIK DAN FAKULTI) dengan ini mengaku bahawa disertasi/tesis yang bertajuk MITOS AGAMA KRISTIAN DALAM SAJAK MODEN A.S. FRANCIS.

adalah hasil kerja saya sendiri. Saya tidak memplagiat dan apa-apa penggunaan mana-mana hasil kerja yang mengandungi hak cipta telah dilakukan secara urusan yang wajar dan bagi maksud yang dibenarkan dan apa-apa petikan, ekstrak, rujukan atau pengeluaran semula daripada atau kepada mana-mana hasil kerja yang mengandungi hak cipta telah dinyatakan dengan sejelasnya dan secukupnya

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

Tandatangan pelajar

**ii. Perakuan Penyelia:**

Saya, PM. DR. SAMIKKANU JABAMONEY A/L ISHAK SAMUEL (NAMA PENYELIA) dengan ini mengesahkan bahawa hasil kerja pelajar yang bertajuk MITOS AGAMA KRISTIAN DALAM SAJAK MODEN A.S. FRANCIS

(TAJUK) dihasilkan oleh pelajar seperti nama di atas, dan telah diserahkan kepada Institut Pengajian Siswazah bagi memenuhi sebahagian/sepenuhnya syarat untuk memperoleh Ijazah SARJANA SASTERA (SLA NYATAKAN NAMA IJAZAH).

17.07.2019
Tarikh

Tandatangan Penyelia

Assoc. Prof. Dr. SAMIKKANU JABAMONEY ISHAK SAMUEL
Faculty of Languages and Communication
Sultan Idris Education University
35900 Tanjong Malim, Perak, Malaysia

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

UNIVERSITI PENDIDIKAN SULTAN IDRIS
SULTAN IDRIS EDUCATION UNIVERSITY

**INSTITUT PENGAJIAN SISWAZAH /**
***INSTITUTE OF GRADUATE STUDIES***

**BORANG PENGESAHAN PENYERAHAN TESIS/DISERTASI/LAPORAN KERTAS PROJEK**
***DECLARATION OF THESIS/DISSERTATION/PROJECT PAPER FORM***

Tajuk / *Title*: MITOS AGAMA KRISTIAN DALAM SAJAK MODEN A.S. FRANCIS.

No. Matrik /*Matric No.*: M20122001788

Saya / *I* : INDHRAN A/L ANANDAN

(Nama pelajar / *Student's Name*)

mengaku membenarkan Tesis/Disertasi/Laporan Kertas Projek (Kedoktoran/Sarjana)* ini disimpan di Universiti Pendidikan Sultan Idris (Perpustakaan Tuanku Bainun) dengan syarat-syarat kegunaan seperti berikut:-
*acknowledged that Universiti Pendidikan Sultan Idris (Tuanku Bainun Library) reserves the right as follows:-*

1. Tesis/Disertasi/Laporan Kertas Projek ini adalah hak milik UPSI.
   *The thesis is the property of Universiti Pendidikan Sultan Idris*
2. Perpustakaan Tuanku Bainun dibenarkan membuat salinan untuk tujuan rujukan dan penyelidikan.
   *Tuanku Bainun Library has the right to make copies for the purpose of reference and research.*
3. Perpustakaan dibenarkan membuat salinan Tesis/Disertasi ini sebagai bahan pertukaran antara Institusi Pengajian Tinggi.
   *The Library has the right to make copies of the thesis for academic exchange.*
4. Sila tandakan ( √ ) bagi pilihan kategori di bawah / *Please tick ( √ ) from the categories below:-*

| | | |
|---|---|---|
| ☐ | SULIT/*CONFIDENTIAL* | Mengandungi maklumat yang berdarjah keselamatan atau kepentingan Malaysia seperti yang termaktub dalam Akta Rahsia Rasmi 1972. / *Contains confidential information under the Official Secret Act 1972* |
| ☐ | TERHAD/*RESTRICTED* | Mengandungi maklumat terhad yang telah ditentukan oleh organisasi/badan di mana penyelidikan ini dijalankan. / *Contains restricted information as specified by the organization where research was done.* |
| ☑ | TIDAK TERHAD / *OPEN ACCESS* | |

(Tandatangan Pelajar/ Signature)

(Tandatangan Penyelia / *Signature of Supervisor*)
& (Nama & Cop Rasmi / *Name & Official Stamp*)

Tarikh: 17-07-2019

Assoc. Prof. Dr. SAMIKKANU JABAMONEY ISHAK SAMUEL
Faculty of Languages and Communication
Sultan Idris Education University
35900 Tanjong Malim, Perak,Malaysia

Catatan: Jika Tesis/Disertasi ini **SULIT @ TERHAD**, sila lampirkan surat daripada pihak berkuasa/organisasi berkenaan dengan menyatakan sekali sebab dan tempoh laporan ini perlu dikelaskan sebagai **SULIT** dan **TERHAD**.

*Notes: If the thesis is CONFIDENTAL or RESTRICTED, please attach with the letter from the related authority/organization mentioning the period of confidentiality and reasons for the said confidentiality or restriction.*

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


**நன்றியுரை**

ஏ.எஸ்.பிரான்சிஸ் புதுக்கவிதைகளில் கிறிஸ்துவத் தொன்மம் எனும் எனது இவ்வாய்வினை மேற்கொள்ள வாய்ப்பும் அனுமதியும் அளித்த சுல்தான் இட்ரீசு கல்வியியல் பல்கலைக்கழகத்திற்கு முதற்கண் வணக்கம் உரித்தாகுக.

என்னுடைய இச்சிறு ஆய்வு முயற்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அரவணைப்பும் நல்லாலோசனையையும் தந்து இவ்வாய்வேடு நன்முறையில் அமைந்திட வழிகாட்டியாகத் துணை நின்ற நெறியாளார் பெருந்தகை இணைப்பேராசிரியர் முனைவர் சாமிக்கண்ணு ஜெபமணி ஈசாக்கு சாமுவேல் அவர்கட்கு உளப்பூர்வமான நன்றி மலர்களைச் சமர்ப்பிக்கின்றேன்.

மேலும், நான் இவ்வாய்வினை மேற்கொள்ள உறுதுணையாக இருந்த என் குடும்பத்தாருக்கும் இவ்வேளையில் நன்றியினைச் சேர்ப்பிப்பதில் உவகைக் கொள்கிறேன். அதோடு மட்டுமல்லாது, இந்த ஆய்வு தொடர்பான ஐயங்களை அவ்வப்போது முகமலர்ச்சியுடன் தெளிவுபடுத்திய அனைத்துத் தரப்பினருக்கும் இவ்வேளையில் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



## ஆய்வுச்சாரம்

இந்த ஆய்வு ஏ.எஸ். பிரான்சிஸ் புதுக்கவிதைகளில் காணப்படும் கிறிஸ்துவத் தொன்மங்களை அடையாளம் காணுதல், ஏ.எஸ். பிரான்சிஸ் புதுக்கவிதைகளில் காணப்படும் கிறிஸ்துவத் தொன்மங்களைத் திருவிவிலியத்துடன் ஒப்பிடுதல், ஏ.எஸ். பிரான்சிஸ் புதுக்கவிதைகளில் காணப்படும் கிறிஸ்துவத் தொன்மங்களின் பயன்பாட்டின் நோக்கத்தைப் பகுப்பாய்தல் என்ற மூன்று நோக்கங்களைக் கொண்டுள்ளது. இந்த ஆய்வின்வழி ஆய்வாளர், ஏ.எஸ்.பிரான்சிஸ் அவர்களின் கவிதைகளில் இடம்பெற்றுள்ள கிறிஸ்துவத் தொன்மங்களை ஆராய்ந்துள்ளார். ஆய்வாளர் இந்த ஆய்வினை மேற்கொள்ள ரோலாண்ட் பார்த்ட்தேஸ் என்பவரின் தொன்மக் கோட்பாட்டைப் பயன்படுத்தியுள்ளார். மொத்தம் ஆறு புதுக்கவிதைத் தொகுப்புகள் இவ்வாய்வில் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆறு தொகுப்புகளிலிருந்து 226 கவிதைகள் ஆய்வுக்குட்படுத்தப்பட்டன. அவற்றுள் 57 கவிதைகள் (25.2%) கிறிஸ்துவத் தொன்மத்தைக் கொண்டிருக்கின்றன. மொத்தம் 36 நோக்கத்தை இத்தொன்மங்கள் கொண்டிருக்கின்றன. அவற்றுள் 12 கவிதைகள் (33.3%) வரலாற்றுத் தொன்மக் கவிதைகளிலும் 24 கவிதைகள் (66.7%) சம்பவங்கள் அடிப்படையிலான கவிதைகளிலும் இடம்பெற்றுள்ளன. 57 கவிதைகளில் 39 கவிதைகள் (68.4%) வரலாற்றுத் தொன்மத்தையும் 18 கவிதைகள் (31.6%) சம்பவத் தொன்மங்களையும் குறிக்கின்றன. ஏ.எஸ்.பிரான்சிஸ் புதுக்கவிதைகள் காட்டும் தொன்மங்களும் திருவிவிலியம் காட்டும் தொன்மங்களும் 100% சாலப் பொருந்தி இருக்கின்றன. தொன்மக் கோட்பாட்டுக் கூறுகளை ஏ.எஸ்.பிரான்சிஸ் புதுக்கவிதைகள் முழுமையாகக் கொண்டுள்ளன. திருவிவிலியத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தொன்மங்கள் இலக்கிய படைப்புகளை குறிப்பாகப் புதுக்கவிதைகளைப் படைக்க வழிகாட்டியாகக் கொள்ளலாம்.


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


## ABSTRAK

Kajian ini adalah untuk mengenal pasti serta menganalisis tujuan penggunaan mitos agama Kristian dalam sajak moden A.S. Francis dan membandingkannya dengan ayat-ayat suci Al-Injil. Kajian ini adalah sebuah kajian kepustakaan yang menggunakan kaedah analisis kandungan serta teori mitos yang dicetuskan oleh Roland Barthes dalam enam buah kumpulan sajak moden A.S. Francis. Pola perbincangan kajian ini tertumpu kepada mitos agama Kristian berunsur sejarah dan peristiwa. Dapatan kajian menunjukkan daripada 226 buah sajak moden yang dikaji sejumlah 57 (25.2%) sajak moden sahaja mencerminkan mitos agama Kristian. Daripada 57 sajak moden tersebut, 39 (68.4%) sajak moden menggambarkan mitos sejarah dan 18 (31.6%) sajak moden menggambarkan mitos peristiwa. Mitos agama Kristian tersebut digunakan untuk memenuhi 36 tujuan. Daripada 36 tujuan tersebut 12 (33.3%) tujuan penggunaan adalah untuk mitos berunsur sejarah dan 24 (66.7%) tujuan penggunaan adalah untuk mitos berunsur peristiwa. Selain itu, mitos agama Kristian berunsur sejarah dan peristiwa yang digambarkan dalam sajak moden A.S.Francis 100% padan dengan ayat-ayat suci Al-Injil. Kesimpulannya, sajak moden A.S. Francis dikarang dengan menggunakan mitos agama kristian yang terdapat dalam ayat-ayat suci Al-Injil. Implikasinya, mitos agama kristian yang terdapat dalam ayat-ayat suci Al-Injil boleh dijadikan panduan dalam menghasilkan karya-karya sastera terutamanya sajak moden.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


# உள்ளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| **PERAKUAN KEASLIAN PENULISAN** | ii |
| **PENGESAHAN PENYERAHAN DISERTASI** | iii |
| **PENGHARGAAN** | iv |
| **ஆய்வுச்சாரம்** | v |
| **ABSTRAK** | vi |
| **ABSTRACT** | vii |
| **உள்ளடக்கம்** | viii |
| **அட்டவணைப் பட்டியல்** | xiii |
| **வரைப்படம் பட்டியல்** | xiv |
| **இயல் 1 அறிமுகம்** | |
| 1.1 முன்னுரை | 1 |
| 1.2 ஆய்வுப் பின்னணி | 3 |
| 1.3 ஆய்வுச் சிக்கல் | 10 |
| 1.4 ஆய்வு நோக்கம் | 13 |
| 1.5 ஆய்வு வினா | 14 |
| 1.6 ஆய்வு முக்கியத்துவம் | 14 |
| 1.7 ஆய்வு எல்லை | 16 |
| 1.8 ஆய்வுச் சான்றாதாரம் | 18 |
| 1.9 கலைச்சொல் விளக்கம் | 18 |


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


1.9.1 புதுக்கவிதை 19

1.9.2 கிறிஸ்துவத் தொன்மம் 19

1.10 தொகுப்புரை 20

**இயல் 2 முந்தைய ஆய்வுகள்**

2.1 முன்னுரை 22

2.2 உள்நாட்டு ஆய்வுகள் 23

2.3 அயல்நாட்டு ஆய்வுகள் 35

2.4 தொகுப்புரை 37

**இயல் 3 ஆய்வு அணுகுமுறை**

3.1 முன்னுரை 39

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

3.2 ஆய்வு வடிவமைப்பு 40

3.3 ஆய்வுக் கட்டமைப்பு 41

3.4 ஆய்வு அணுகுமுறை 43

3.4.1 நூலக ஆய்வு 43

3.4.2 விளக்க முறை ஆய்வு 44

3.5 தரவு சேகரிப்பு முறை 44

3.5.1 தரவுகளை வாசித்தல் 45

3.5.2 தரவுகளைத் தேர்ந்தெடுத்தல் 46

3.5.3 தரவுகளை வகைப்படுத்துதல் 46

3.6 தரவுகள் பகுப்பாய்வு 47

3.7 ஆய்வுக் கோட்பாடு 48

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


3.8 கோட்பாட்டுக் கட்டமைப்பு 58

3.9 தொகுப்புரை 59

**இயல் 4 ஆய்வின் முடிவுகளும் விவாதங்களும்**

4.1 முன்னுரை 60

4.2 ஏ.எஸ்.பிரான்சிஸ் புதுக்கவிதைகளில் கிறிஸ்துவத் தொன்மம் 61

4.2.1 வாழ்க்கை வரலாறு 63

4.2.1.1 ஆபிரகாம் வாழ்க்கை வரலாறு 64

4.2.1.2 ரூத் வாழ்க்கை வரலாறு 83

4.2.1.3 எஸ்தர் வாழ்க்கை வரலாறு 94

4.2.2 சம்பவங்கள் 109

4.2.2.1 விலக்கப்பட்ட கனி உண்ணுதல் 112

4.2.2.2 இயேசுவின் வருகையை ஆமான் அறிவித்தல் 114

4.2.2.3 இயேசுவின் பிறப்பு 115

4.2.2.4 இயேசு ஐயாயிரம் பேருக்கு உணவளித்தல் 116

4.2.2.5 இயேசு கிறிஸ்து பத்து தொழு நோயாளிகளுக்கு சுகம் அளித்தல் 118

4.2.2.6 á று ஆடுகளில் காணாமல் போன ஒற்றை ஆடு 120

4.2.2.7 இறைவன் ஆறுதல் அளித்தல் 121

4.2.2.8 மனிதர்களின் துன்பம் போக்குதல் 122

4.2.2.9 இயேசு அறிவுரைக் கூறுதல் 124

4.2.2.10 வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகள் 125

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


4.2.2.11 இயேசு ஆசி வழங்குதல் 126

4.2.2.12 இயேசுவின் கோதுமை மணி உவமை 127

4.2.2.13 இயேசு வரிதண்டுபவருடனும் பாவிகளுடனும் உணவருந்துதல் 129

4.2.2.14 பாவிகளுக்கு அருளுதல் 130

4.2.2.15 இயேசு சிலுவையில் அறையப்படுதல் 132

4.2.2.16 இயேசுவின் திருவுடை பகிர்வு 134

4.3 ஏ.எஸ்.பிரான்சிஸ் புதுக்கவிதைகளில் கண்டறியப்பட்டுள்ள தொன்மங்களின் பயன்பாட்டின் நோக்கம் 135

4.3.1 வரலாற்றுத் தொன்மம் 136

4.3.1.1 ஆபிரகாம் வரலாற்றுத் தொன்மப் பயன்பாட்டின் நோக்கம் 137

4.3.1.2 ரூத் வரலாற்றுத் தொன்மப் பயன்பாட்டின் நோக்கம் 140

4.3.1.3 எஸ்தர் வரலாற்றுத் தொன்மப் பயன்பாட்டின் நோக்கம் 143

4.3.2 சம்பவங்கள் வழி காணப்பட்ட தொன்ம பயன்பாட்டின் நோக்கம் 145

4.3.2.1 விலக்கப்பட்ட கனி உண்ணுதல் 145

4.3.2.2 இயேசுவின் வருகையை ஆமான் அறிவித்தல் 146

4.3.2.3 இயேசுவின் பிறப்பு 146

4.3.2.4 இயேசு ஐயாயிரம் பேருக்கு உணவளித்தல் 147

4.3.2.5 இயேசு கிறிஸ்த்து பத்து தொழு நோயாளிகளுக்கு சுகம் அளித்தல் 148

4.3.2.6 நூறு ஆடுகளில் காணாமல் போன ஒற்றை ஆடு 150

4.3.2.7 இறைவன் ஆறுதல் அளித்தல் 150

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


4.3.2.8 மனிதர்களின் துன்பம் போக்குதல் 151

4.3.2.9 இயேசு அறிவுரைக் கூறுதல் 152

4.3.2.10 வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகள் 153

4.3.2.11 இயேசு ஆசி வழங்குதல் 153

4.3.2.12 இயேசுவின் கோதுமை மணி உவமை 154

4.3.2.13 இயேசு வரிதண்டுபவருடனும் பாவிகளுடனும் உணவருந்துதல் 155

4.3.2.14 பாவிகளுக்கு அருளுதல் 156

4.3.2.15 இயேசு சிலுவையில் அறையப்படுதல் 156

4.3.2.16 இயேசுவின் திருவுடை பகிர்வு 157

4.4 தொகுப்புரை 158

**இயல் 5 முடிவுரை**

5.1 முன்னுரை 159

5.2 ஆய்வு முடிவுகளின் சுருக்கம் 160

5.2.1 ஏ.எஸ்.பிரான்சிஸ் புதுக்கவிதைகளில் காணப்படும் கிறிஸ்துவத் தொன்மம் 161

5.2.2 ஏ.எஸ்.பிரான்சிஸ் புதுக்கவிதைகளில் காணப்படும் கிறிஸ்துவத் தொன்மங்கள் திருவிவிலியத்துடன் ஒப்பிடுதல் 165

5.2.3 ஏ.எஸ்.பிரான்சிஸ் புதுக்கவிதைகளில் காணப்பட்டுள்ள கிறிஸ்துவத் தொன்மத்தின் பயன்பாட்டின் நோக்கம் 167

5.3 தொடர் ஆய்வுக்கான பரிந்துரை 169

5.4 முடிவுரை 170

மேற்கோள்நூல் பட்டியல் 172

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


## அட்டவணைப் பட்டியல்


| எண் | | பக்கம் |
|---|---|---|
| 1.1 | ஏ.எஸ் பிரான்சிஸ் புதுக்கவித் தொகுப்புகள் | 17 |
| 4.1 | ஆபிரகாமின் வாழ்க்கை வரலாற்றுச் சம்பவங்கள் திருவிவிலியத்தோடு ஒப்பீடு | 64 |
| 4.2 | ரூத் வாழ்க்கை வரலாற்றுச் சம்பவங்கள் திருவிவிலியத்தோடு ஒப்பீடு | 83 |
| 4.3 | எஸ்தர் வாழ்க்கை வரலாற்றுச் சம்பவங்கள் திருவிவிலியத்தோடு ஒப்பீடு | 94 |
| 4.4 | சம்பவங்கள் திருவிவிலியத்துடன் ஒப்பீடும் பயன்பாட்டின் நோக்கமும் | 109 |


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


# வரைபடம் பட்டியல்


| எண் | | பக்கம் |
|---|---|---|
| 3.1 | ஆய்வு கட்டமைப்பு | 42 |
| 3.8 | ஆய்வுக் கோட்பாடு கட்டமைப்பு | 58 |


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


# இயல் 1

# அறிமுகம்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

## 1.1 முன்னுரை

மானுட வாழ்வின் சம்பவங்கள், சூழல்கள், சமகால சிந்தனை போன்றவற்றை எடுத்தியம்பப் பிறந்ததே இலக்கியம் எனலாம். இந்த இலக்கியமானது சிறுகதை, கவிதை, நாவல், நாடகம் என பல வடிவங்களைக் கொண்டிருக்கிறது. அவ்வகையில் தமிழுக்கு முதல் இலக்கியமாகக் கருதப்படுவது கவிதை இலக்கியமே. மனித வாழ்வு, இயற்கை என அனைத்துக் கூறுகளும் கவிதை இலக்கியத்தில்தான் முதன் முதலில் இடம்பெற்றன என்றால் அது மிகையில்லை. தமிழ்மொழி வாழ்கின்ற

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


அனைத்து நாடுகளிலும் கவிதை இலக்கியப் படைப்புகள் இனிதே வளர்ச்சியடைந்து கொண்டிருக்கின்றன. கவிதைப் படைப்பாளர்களும் நாளுக்கு நாள் பெருகிக்கொண்டே இருக்கிறார்கள். அந்த வகையில் நமது மலேசியத் திருநாட்டிலும் கவிதை இலக்கியத்திற்குத் தனி ஓர் இடம் உள்ளதென்றால் அதை மறுப்பதற்கில்லை. இந்த ஆய்வானது ஏ.எஸ். பிரான்சிஸ் புதுக்கவிதைகளில் இடம்பெற்றுள்ள கிறிஸ்துவத் தொன்மக் கூறுகளை ஆராய மேற்கொள்ளப்படுகிறது.

கவிதை இலக்கியம் என்பது இலக்கிய வகைகளிலேயே மிகவும் தொன்மையானது. Samad Said, A. (1996:37) அவர்கள் 'கவிதை என்பது குறிப்பிட்ட ஒரு காலக் கட்டத்தில் வாழ்ந்த மனிதச் சமுதாயத்தின் வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் ஒரு சமுதாயக்கருவி' எனக் குறிப்பிடுகிறார்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

கவிதை இலக்கியத்தில் நடந்த சம்பவங்களைப் பற்றி உணர்ச்சிப்பூர்வமாகச் சித்தரிக்க முடியும். உவமானம், உவமேயம், அணிகள் போன்ற பலதரப்பட்ட கவிதைக் கூறுகள் வாசிப்பாளனின் உணர்ச்சிகளைத் தூண்டக்கூடிய அம்சங்களாகத் திகழ்கின்றன.

மலேசிய இலக்கியப்படைப்புகள் பல ஆய்வுகளுக்கு உட்படுத்தப்படுவது யாவரும் அறிந்ததே. ஆனால், கிறிஸ்துவத் தொன்மம் என்ற தலைப்பில் இதுவரை எந்தவொரு ஆய்வும் மேற்கொள்ளப்படவில்லை என்பது இங்குக் குறிப்பிடத் தக்கதாகும். எனவேதான், ஆய்வாளர் இத்தலைப்பினைத் தேர்ந்தெடுத்துள்ளார். ஏ.எஸ் பிரான்சிஸ் அவர்கள் நாடறிந்த எழுத்தாளர் ஆவார். இவர் கிறிஸ்துவத் தொன்மம் சார்ந்த பல

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


கவிதைகளை இயற்றியுள்ளார். ஆக, இவருடைய கவிதை ஆய்வாளரின் இந்த ஆய்வுக்கு மூலமாக அமையும்.

## 1.2 ஆய்வுப் பின்னணி

மனிதனின் அனுபவங்களை உணர்ச்சி மாறாமல் கலைநயத்தோடு உலகுக்கு அளிக்கப் பிறந்ததே இலக்கியம். ‘வாழ்க்கையின் தனிச்சிறப்புக் கூறுகளை வடித்துக்காட்டுவதே இலக்கியம். இலக்கியம், வாழ்க்கையின் வடிவம் அன்று! வார்ப்பே ஆகும்! ஒரு வகையில் ஒலிகளை வடிவங்கள் என்று உவமிக்கலாம். இலக்கியங்கள் என்பவை வாழ்க்கையின் ஒலியன்கள் (phonemes) என்று போற்றலாம்’ என்று ந.சஞ்சீவி (2005) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இலக்கியம் படைத்தலுக்கான அடிப்படை, தன்னுணர்ச்சியை வெளிப்படுத்தலேயாகும். மேலும், பிறர் வாழ்விலுள்ள அக்கறையும் உண்மை உலகிலுள்ள ஆர்வமும் இவற்றைக் கலைநயத்தோடு கூறும் ஆற்றலுமே இலக்கியம் எழக் காரணங்களாகும். உள்ளதை உள்ளவாறு இயற்றி, கருத்து மாற்றம் நிகழாமல், கற்பனை மற்றும் கலைநயம் கலந்து உணர்ச்சி வெளிப்பாடாய் பிறப்பதே இலக்கியம் எனலாம். ஜேசுதாஸ், (2010) ‘இலக்கியம் என்பது ஒரு சமுதாயத்தின் பண்பாட்டையும் சிந்தனை மாற்றங்களையும் படம் பிடித்துக்காட்டும் தன்மையைக் கொண்டது’ என விளக்குகிறார். எனவேதான், இலக்கியம் ஒரு சமுதாயத்திற்கான அடையாளம் எனக் கூறப்படுகின்றது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


தொடக்கக் காலத்தில் மரபு கவிதைகளே மலேசியத் தமிழ் இலக்கியத்தில் முக்கிய இடம் வகித்தன. நாளடைவில் மேனாட்டு இலக்கியத்தில் ஏற்பட்ட மாற்றங்களும் இலக்கியவாதிகளுக்கு ஏற்பட்ட சிந்தனை மாற்றங்களும் மரபு கவிதை நலிவடையச் செய்தன. அவை தற்கால மக்களின் தேவைகளை நிறைவு செய்வனவாக அமையவில்லை என்பதாக அவர்கள் உணர்ந்தனர். ஆக, மரபு கவிதைக்கான வேறு ஓர் இலக்கிய வடிவம் கவிஞர்களுக்குத் தேவைப்பட்டது. புது வடிவத் தேவையின்போது சொற்களை எந்த ஒரு இலக்கண விதிகளும் இல்லாமல் உணர்ச்சியை உள்ளவாறே சொல்லக் கூடிய எழுத்துப் படிவங்கள் உருவாகலாயின. தங்கள் உள்ளங்கிடங்கை எந்த ஒரு கட்டுப்பாடும் இல்லாமல் சுதந்திரமாகக் கற்பனை வளத்துடன் எளிதில் எடுத்தியம்பும் இலக்கியக் குழந்தையாகப் புதுக்கவிதை வடிவம் பிறந்தது. இவ்வாறு

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

பிறந்தவைதாம் நிபந்தனையற்ற கவிதை (verse libre), உரையாடல் கவிதை, (prose poem) மற்றும் பலவாகும் (இரா. தண்டாயுதம், 1985).

வால்ட் விட்மேன், (1819-1892) என்பவர் அமெரிக்காவின் பிரபல கவிஞர்களுள் ஒருவர். இவர் 1855ஆம் ஆண்டு 12 கவிதைகள் அடங்கிய ‘புல்லின் இதழ்கள்’ எனும் கவிதை நூலை இயற்றினார். கவிதை இலக்கணத்தைச் சிறிதும் பின்பற்றாது வெளிவந்த நூலாக இது திகழ்ந்தது. கவிதைகள் அனைத்தும் வசன நடை கொண்டதாகவும் சீரான அசையின்றியும் அமைக்கப்பட்டிருந்தன. கவிதை என்பது அதன் சொல்லாடலிலும் சொல்லின் வலிமையில் அழுத்தமும் கொண்டிருக்க வேண்டுமேயன்றி கவிதை இலக்கணத்தை முழுமையாகப் பின்பற்றியிருக்க வேண்டிய அவசியமில்லை என அவர் கருதினார். அடிப்படையிலே அவர்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


தம்முடைய கவிதைகளில் புத்தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தார். இதனையே, கவிதைகளில் புதுப்போக்கு எனவும் ‘கட்டற்ற கவிதை வகை’ எனவும் பின்னர் வர்ணிக்கப்பட்டது. இவ்வகை கவிதைகளே எளிதில் புரிந்து கொள்ளவும் வகை செய்கின்றது எனவும் கருதப்பட்டது. மேலும், ஒரு கவிதையானது தனது கருத்து வெளிப்பாட்டில் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருப்பதே முக்கியம் எனவும் அதன் இலக்கண விதி அவ்வளவாக முக்கியம் இல்லை எனவும் அவர் தனக்கென கொள்கை ஒன்று அமைத்திருந்தார். அதன்படியே அவருடைய ‘புல்லின் இதழ்கள்’ எனும் கவிதை நூலும் அமைந்திருந்தது (அறவாணன், 1979).

18ஆம் நூற்றாண்டில் French Academy எனும் அமைப்பு, கவிதை இயற்றுவதற்கான சில வரையறைகளையும் விதிமுறைகளையும் வகுத்திருந்தது. அந்த வரையறைகளும் விதிமுறைகளும் கவிஞர்களுக்குக் கவிதை இயற்றுவதில் பெரும் சிக்கலையும் சிரமத்தையும் ஏற்படுத்தியிருந்தன. இதன் விளைவாக பிரஞ்சு நாட்டுக் கவிஞர்களில் பலர் கட்டமைப்பற்ற அதாவது வரையறைகளையும் விதிமுறைகளையும் பின்பற்றாத கவிதைகளை இயற்றத் தொடங்கினர். Fenathaler, P.Verlein, A.Rimbaud போன்ற கவிஞர்கள் விதிமுறைகளுக்கும் வரையறைகளுக்கும் அப்பாற்பட்ட வசனக் கவிதைகள் இயற்றியவர்களுள் குறிப்பிடத்தக்கவர்களாவர். A.Rimbaud (1854-1891) எனும் கவிஞர் தமது 17வது வயதில் Sun And Flesh எனும் கவிதையை வசனக் கவிதை வடிவில் இயற்றினார். தன் உள்ளக்கிடங்கை, உணர்ச்சிகளை எந்த ஒரு கட்டுப்பாடும் இல்லாமல் மிகவும் சுதந்திரமாக இக்கவிதையில் வெளிப்படுத்தியிருந்தார். வசனக் கவிதை, இலக்கியத்தில் இடம்பெற மிக

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi
05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


அடிப்படையாக விளங்கியவர்களுள் A.Rimbaud (1854-1891) அவர்களும் ஒருவராவார். நாளடைவில் இவருடைய கவிதை போக்கே பிற கவிஞர்களாலும் பின்பற்றப்பட்டது. இவ்வாறே வசனக் கவிதை மெல்ல மெல்ல இலக்கியத்தில் ஊடுருவியது (Alex Preminger, 1974).

18ஆம் நூற்றாண்டில் கவிதை என்பது புத்திலக்கிய வகைகளுள் மிகவும் பிரசித்திப்பெற்ற ஒன்றாக விளங்கியது. ஆயினும், 20ஆம் நூற்றாண்டுகளில்தான் இவை பதிப்பாக்கம் செய்யப்பட்ட கவிதைகளாக வெளிவந்தன. இக்கால கவிதைகள், கவிதை இலக்கணத்தைப் பின்பற்றி எழுதப்பட்டவையாக இருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. முரசு நெடுமாறன் (1997) கவிதை என்பது ஒரு சமுதாயத்தின் பின்னணியைக் காட்டுவதாகவும் அவர்களின் வாழ்க்கை முறையைக் குறிப்பதாகவும் அமைந்திருக்க

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

வேண்டும் எனக் கூறியிருக்கின்றார். மேலும், அவை கவிதைகளில் கவிதைக்கே உரித்தான அழகுடனும் கற்பனைத் திறத்துடனும் படைக்கப்பட்டிருக்க வேண்டும் எனவும் அவர் எடுத்துரைக்கின்றார்.

தமிழில் தோன்றிய மரபு கவிதை என்பது மிகவும் மூத்த இலக்கிய வகையாகும். சிலப்பதிகாரம், இராமாயணம் என பலதரப்பட்ட இலக்கியப் படைப்புகள் மரபு கவிதைகளாகவே படைக்கப்பட்டிருந்தன. இத்தகைய இலக்கிய வகை புதுக்கவிதையின் வருகையால் நலிவடையத் தொடங்கியது. புதுக்கவிதை எனும் இலக்கிய வகை படிப்பதற்கும் கவிதையின் கருத்தை உணர்ச்சியோடு விளங்கிக்கொள்ளவும் மிகவும் எளிதான ஓர் இலக்கிய வகையாக விளங்கியது. மேலும், ஆழமான கருத்துகளை மிகவும் எளிமையான வகையில் வாசிப்போரின் உள்ளத்தை நெகிழச் செய்யும்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


வகையில் எடுத்துரைப்பது புதுக்கவிதையே. ஆகவேதான், மரபுக்கவிதை மெல்ல மெல்ல நலிவடைந்து போனது (இராஜம் ராஜேந்திரன், 2007).

கவிதை இயற்றுவதில் புதுமைப்போக்கு அவசியமானதைத் தொடர்ந்து புதுக்கவிதை இலக்கியம் தோன்றலாயிற்று. சொல்ல நினைத்தக் கருத்துகளைச் சில கட்டுப்பாட்டுகளோடு சொல்ல வேண்டிய நிலை மரபு கவிதைக்கு உள்ளதேயன்றி புதுக்கவிதைக்கு இல்லை என்பதே இதற்குக் காரணமாகும். மரபு கவிதையால் ஆழமான கருத்துகளை நேரடியாகச் சொல்ல முடியாமல், சில கவிதை வரையறைகளோடு சொல்லவேண்டியிருந்தது. கவிஞர்களுக்குக் கட்டுக்குள் கவிதை எழுத வேண்டிய நிலை இருந்தது. இதனைச் சரி செய்யவே புதுக்கவிதை தோன்றியது எனவும் கூறலாம்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

புதுக்கவிதை என்றால் என்ன என்பது பலதரப்பட்ட இலக்கிய அறிஞர்களால் விளக்கப்பட்டுள்ளது. மு.மேத்தா (2008) அவர்கள் புதுக்கவிதை என்பது கருத்துகளை எந்தக் கட்டுப்பாடுகளுமின்றி சுயமாகப் படைக்கக்கூடிய இலக்கிய வகை என்று கூறுகிறார். இவரைத் தொடர்ந்து இரா.தண்டாயுதம் அவர்கள், மனிதர் வாழ்வின் துயரங்கள், பண்பாட்டுச் சீரழிவுகள், அரசியல் தாக்கங்கள் ஆகியவை எந்த ஒரு மாற்றங்களுமின்றி உணர்ச்சிகளை உள்ளவாறே சொற்களாகக் கொடுப்பது, வாசகரின் உணர்வினைத் தொடுவது புதுக்கவிதை என கூறுகிறார் (திலகவதி, 1988).

நன்னூலில் பவணந்தி முனிவர் (11 ஆம் பதிப்பு, 1957) ‘பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல; கால வகையினானே’ எனக்கூறுகிறார். அதாவது ஏற்படுகின்ற மாற்றங்கள் யாவும் தவறில்லை, அவை கால

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


மாற்றத்திற்கு ஏற்ப மாறி அமைகின்றன' என்பதே அவருடைய கூற்றாகும். இதன் அடிப்படையில்தான் இலக்கியவாதிகள் மரபு கவிதை புதுக்கவிதையாக மாற்றம் காண்பது பிழையில்லை, அது சமகாலத்துக்கு ஏற்ற இலக்கிய மாற்றம் என கருதுகின்றனர்.

19ஆம் நூற்றாண்டுகளில் வெளிவந்த பெரும்பான்மையான கவிதைகள் நன்னெறி, சுய ஒழுக்கம், ஆன்மீகம் போன்ற நல்வழிச் சிந்தனைக் கவிதைகளாகவே இருந்தன. 20ஆம் நூற்றாண்டுகளில் இந்நிலை மெல்ல மெல்ல மாறத் தொடங்கியது. இக்காலக் கட்டத்தில் சமூகம் மற்றும் வாழ்வியல் தொடர்பான கருப்பொருள்கள் கொண்ட கவிதைகள் பெரும்பான்மையாகப் படைக்கப்பட்டன. இவ்வகையான மாற்றம் தமிழகக் கவிஞர், வீரக்கவிஞர் என்று போற்றப்படும் பாரதியார் அவர்களால்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

ஏற்பட்டது. பெண் விடுதலை, மூட நம்பிக்கைகள் போன்ற சமுதாயச் சிந்தனைகள், விழிப்புணர்வு போன்றவை அவருடைய கவிதைகளில் பெரிதும் வெளிப்பட்டன. இக்காலக் கட்டத்தின் கவிதைகள் பெரும்பாலும் 1930ஆம் ஆண்டு முதல் 1940ஆம் ஆண்டு வரை வெளிவந்தவை என்பது குறிப்பிடத்தக்கது (இராஜம் இராஜேந்திரன், 2007).

மலேசிய வரலாற்றின்படி 1950ஆம் ஆண்டு கால கட்டங்கள் மலேசியாவின் சுதந்திரப் போராட்ட காலங்களாகும். இக்காலகட்டத்தில் வெளிவந்த பெரும்பான்மைக் கவிதைகள் சுதந்திரப் போராட்டம், பல்லின மக்கள் ஒற்றுமை, அரசியல், பொருளாதாரம், நாட்டு முன்னேற்றம், சமூகம் போன்ற பொதுக் கருப்பொருள்களைக் கொண்டிருந்தன (இராஜம் இராஜேந்திரன், 2007).

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


இவ்வாறாக, மலேசியாவின் கவிதை வரலாறு பல பரிணாமங்களைக் கொண்டிருக்கிறது. குடும்ப உறவு, காதல், நட்பு, வரலாறு, கல்வி, அரசியல் என பலதரப்பட்ட கருப்பொருள்கள் கொண்ட கவிதைகள் மலேசியத் தமிழ் இலக்கியத்திற்கு அரும் பெரும் சொத்துகளாகத் திகழ்கின்றன. ஆயினும், பல்வேறு மதத்தினர் ஒற்றுமையாக வாழும் இத்திருநாட்டில் மதம் அடிப்படையிலான கவிதைகள் வெளியீடு கண்டது மிகவும் குறைவு. அந்த வகையில் மலேசியக் கவிஞரான ஏ.எஸ். பிரான்சிஸ் அவர்கள் கிறிஸ்துவம் தொடர்பான கவிதைகளை இயற்றுவதில் மிகவும் பிரபலமானவர்.

கிறிஸ்துவச் சமயம் 'திருவிவிலியத்தை' வேத நூலாகக்கொண்ட சமயமாகும். ஏ.எஸ். பிரான்சிஸ் அவர்கள், தம்முடைய கவிதைகளில் திருவிவிலியத்தில் இடம்பெற்றுள்ள சில கிளைக்கதைகள், கூறுகள் ஆகியவற்றையும் இணைத்திருக்கிறார். ஆக, ஆய்வாளர் இவ்வாராய்ச்சியில் திருவிவிலியத்தையும் ஆய்வுக்கு உட்படுத்தியுள்ளார். ஏ.எஸ். பிரான்சிஸ் புதுக்கவிதைகளில் கிறிஸ்துவத் தொன்மம் எனும் இந்த ஆராய்ச்சி அவர் இயற்றிய கிறிஸ்துவச் சமயம் சார்ந்த 6 கவிதைத் தொகுப்புகளை உள்ளடக்கியது என்பது குறிப்பிடத்தக்கது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


## 1.3 ஆய்வுச் சிக்கல்

சிறுகதை, கவிதை, நாடகம், நாவல் என எந்த வகை இலக்கியமானாலும் சரி அதன் மீதான ஆய்வுகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டே இருக்கின்றன. பெரும்பாலான இலக்கிய ஆய்வுகள் சமுதாயம், பொருளாதாரம், நீதிநெறி, ஒழுக்கம் போன்ற பொதுவான கூறுகளிலேயே மேற்கொள்ளப்பட்டுள்ளன. சமயம் தொடர்பான இலக்கியங்களில் இதுபோன்ற ஆய்வுகள் மிகவும் குறைவே.

இராமாயணம் மற்றும் மகாபாரதம் ஆகிய இரண்டும் இந்து சமயம் தழுவிய இருபெரும் இதிகாசங்களாகும். இந்த இலக்கியங்களின் கருத்துகள், பண்டைக்கால இலக்கியங்கள் முதல் தற்கால இலக்கியங்கள் வரை

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

பயன்படுத்தப்பட்டே வருகின்றன. குறிப்பாகக் கூறின், பெரும்பாலான கவிதைகளில் இராமாயண மகாபாரத தாக்கம் அதிகமாகவே காணப்படுகின்றது. இதனைச் சாமிக்கண்ணு ஜெபமணி (2008) அவர்கள் தமது முனைவர் பட்டத்திற்கான ஆய்வில் குறிப்பிட்டுள்ளார். மாறாக, கிறிஸ்துவச் சமயம் தொடர்பான இலக்கியங்கள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டது மிகக் குறைவே. மேலும், கிறிஸ்துவத் திருவிவிலியத்தில் கூறப்பட்டுள்ள கருத்துகள் இலக்கியங்களில் எவ்வாறு பயன்படுத்தப்பட்டுள்ளன? அவை பயன்படுத்தப்பட்ட விதம் என்ன? அவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ள கூறுகளின் நம்பகத்தன்மையும் ஏற்புடைமையும் எப்படி அமைந்துள்ளன? போன்ற பல ஐயங்கள் இன்னும் விடை காணப்படாதவைகளாகவே இருக்கின்றன.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


ஆகவேதான், ஏ.எஸ். பிரான்சிஸ் அவர்களின் கைவண்ணத்தில் உருவான கிறிஸ்துவச் சமயக் கவிதைகளில் காணப்படும் கிறிஸ்துவத் தொன்மத்தை ஆய்வு செய்ய ஆய்வாளர் எண்ணம் கொண்டார். இவ்வாய்வினை மேற்கொள்ள ஆய்வாளர், தொன்மக் கோட்பாட்டைத் தேர்ந்தெடுத்துள்ளார். மலேசியாவில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் இதுவரை கிறிஸ்துவத் தொன்மம் எனும் தலைப்பில் எந்த ஓர் ஆய்வும் மேற்கொள்ளப்படாததாலும் இவ்வாய்வு கிறிஸ்துவத் தொன்மத்தை ஆராயும் புதியதொரு முயற்சி என்பதாலும் ஆய்வாளர் இத்தலைப்பினைத் தேர்ந்தெடுத்துள்ளார்.

மலேசியாவில் தழுவப்படும் மிக முக்கிய சமயங்கள் இஸ்லாம், இந்து, புத்தம் மற்றும் கிறிஸ்துவம் ஆகும். இவற்றுள், சமயம் சார்ந்த

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இலக்கியங்களைத் தமிழில் கொண்டிருக்கின்ற சமயங்களாக இஸ்லாம், இந்து மற்றும் கிறிஸ்துவம் விளங்குகின்றது. தமிழ்ப்புதுக்கவிதைகளில் இந்து சமயம் சார்ந்த தாக்கங்களும் குறிப்புகளும் மிகப் பரவலாகக் காணப்படுகின்றன. எனவேதான் ஆய்வாளர், புத்துக்கவிதைகளில் கிறிஸ்துவத் தொன்மம் என்ற தலைப்பில் மேற்கொண்டுள்ளார். இவ்வாய்வினை மேற்கொள்ள ஆய்வாளர் ஏ.எஸ். பிரான்சிஸ் அவர்களின் கவிதைத் தொகுப்புகளை உட்படுத்தியுள்ளார். எழுத்தாளர் தமது அனைத்துப் படைப்புகளிலும் மனிதனின் தற்கால வாழ்க்கை முறையைப் பற்றிப் பெரிதும் குறிப்பிட்டிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. இயந்திரம் போன்ற இந்த வாழ்க்கையில் பணவேட்டை, சுயநலம், நன்றி மறத்தல் போன்ற பலதரப்பட்ட நெறிபிறழ்ந்த வாழ்க்கையை மனிதன் வாழ்கிறான் என்றும், அவனை இறைசிந்தனையோடு நன்னெறி மிக்கவனாக வாழச்செய்ய

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


வேண்டும் என்ற வேட்கையிலும் கவிஞர் தம் படைப்புகளைப் படைத்திருக்கிறார்.

இறைச்சிந்தனையோடு வாழ்கின்ற மனிதன் மனித நேயத்துடனும் பொதுநலத்துடனும் வாழமுடியும் என்ற கருத்தையும் எழுத்தாளர் வெளிப்படுத்துகிறார். இவ்வாறான சிந்தனைகள் மனிதன் மனதில் விதைக்கப்படுமேயாயின் எதிர்கால வாழ்க்கை நிம்மதியான சூழ்நிலையில் அமையும் எனவும் கவிஞர் எடுத்துரைக்கின்றார். ஆக, ஆய்வாளர் இந்த ஆய்வின் மூலம் கிறிஸ்துவச் சமயம் சொல்லுகின்ற வாழ்வியல் நெறிகளை வாசகர்களுக்கு எளிதில் விளங்கும் வண்ணம் எடுத்தியம்பவும் இவ்வாய்வினை மேற்கொள்ள விழைகின்றார். கிறிஸ்துவச் சமயம் சொல்லும் கடந்த கால மனித வாழ்க்கையைத் தற்கால வாழ்க்கையோடு

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

தொடர்புபடுத்தி, எதிர்கால வாழ்க்கையைத் திட்டமிட்டு அமைத்துக்கொள்ள வழிகாட்டியாக இந்த ஆய்வு அமையும் என்று ஆய்வாளர் உறுதி கொண்டுள்ளார்.

மனித வாழ்க்கை மட்டுமின்றி, இந்தியச் சமுதாயத்தின் பொருளாதாரம், அரசியல் போன்ற அனைத்துச் சமுதாயக் கூறுகளும் தொன்மங்களாக ஏ.எஸ். பிரான்சிஸ் கவிதைகளில் காண முடிகின்றது. ஆக, ஆய்வாளர் ஏ.எஸ். பிரான்சிஸ் கவிதைகளில் காணப்படுகின்ற அனைத்துக் தொன்மக் கூறுகளையும் உடன் ஆய்வு செய்ய எண்ணம் கொண்டுள்ளார். எழுத்தாளர் சமுதாயத்திற்குச் சொல்ல விழைகின்ற கருத்து இவ்வாய்வின் மூலம் எளிதாக மக்களுக்குச் சொல்லப்படும் என்பது திண்ணம்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



இவ்வாய்வின் சாரம் எதிர்காலத்தில் சமயம் தொடர்பான ஆய்வு மேற்கொள்ளும் அனைத்து ஆய்வாளர்களுக்கும் கிறிஸ்துவச் சமயத்தின் கருத்துகளை எளிதாக விளக்கும் மேற்கோள் நூலாகவும் விளங்கும் என்று பெரிதும் எதிர்ப்பார்க்கப்படுகிறது.

## 1.4 ஆய்வு நோக்கம்

இந்த ஆய்வு கீழ்க்காணும் நோக்கங்களைக் கொண்டுள்ளது:

1. ஏ.ஏஸ். பிரான்சிஸ் புதுக்கவிதைகளில் காணப்படும் கிறிஸ்துவத் தொன்மங்களை அடையாளம் காணுதல்.
2. ஏ.ஏஸ். பிரான்சிஸ் புதுக்கவிதைகளில் காணப்படும் கிறிஸ்துவத் தொன்மங்களைத் திருவிவிலியத்துடன் ஒப்பிடுதல்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

3. ஏ.ஏஸ். பிரான்சிஸ் புதுக்கவிதைகளில் காணப்படும் கிறிஸ்துவத் தொன்மங்களின் பயன்பாட்டின் நோக்கத்தைப் பகுத்தாய்தல்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


## 1.5 ஆய்வு வினா

இந்த ஆய்வு மூன்று ஆய்வு வினாக்களைக் கொண்டுள்ளது:

1. ஏ.எஸ். பிரான்சிஸ் புதுக்கவிதைகளில் காணப்படும் கிறிஸ்துவத் தொன்மங்கள் யாவை?
2. ஏ.எஸ். பிரான்சிஸ் புதுக்கவிதைகளில் காணப்படும் கிறிஸ்துவத் தொன்மங்கள் திருவிவிலியத்துடன் பொருந்தி அமைந்துள்ளனவா?
3. ஏ.எஸ். பிரான்சிஸ் புதுக்கவிதைகளில் கிறிஸ்துவத் தொன்மங்களின் பயன்பாட்டின் நோக்கங்கள் யாவை?

## 1.6 ஆய்வு முக்கியத்துவம்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இந்த ஆய்வு ஏ.எஸ். பிரான்சிஸ் அவர்களின் புதுக்கவிதைகளில் கிறிஸ்துவத் தொன்மத்தை ஆராய மேற்கொள்ளப்பட்ட ஆய்வாகும். இந்த ஆய்வு ஆய்வாளருக்கும் வாசகருக்கும் கிறிஸ்துவச் சமயக் கருத்துகள் தொடர்பான தாக்கத்தை ஏற்படுத்தும். கவிதை என்பது இலக்கிய வகைகளிலேயே மிகவும் சுவைப் பொருந்திய இலக்கிய வகையாகும். சொல்வதைச் சுருங்கச் சொல்லியும் சுருக்கமாகச் சொல்வதில் மிகப்பெரிய தத்துவத்தைப் புதைத்துச் சொல்வதிலும் கவிதை இலக்கியத்திற்கு நிகர் வேறேதுமில்லை. அதிலும் புதுக்கவிதை என்பது மிகச் சுருக்கமாகச் சொல்லி பெரியதொரு கருத்தினைச் சொல்லும் இலக்கியமாகும். அத்தகு இலக்கியத்தின் வழி கிறிஸ்துவத் தொன்மங்களை மக்களுக்கு அளிப்பதே இவ்வாய்வின் முக்கியத்துவமாகும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


மேலும், கிறிஸ்துவ சமயம் சொல்லுகின்ற உன்னதமான மனித நேய கருத்துகள் அந்தச் சமயத்தினருக்கு மட்டுமல்லாது இன்ன பிற மக்களுக்கும் சென்று சேர வேண்டும் என்ற வேட்கையிலும் ஆய்வாளர் இவ்வாய்வினை மேற்கொள்கிறார். இவ்வாய்வின் வழி வாசகர்கள் கிறிஸ்துவச் சமயம் சொல்லும் சமுதாய மற்றும் மனித நேய கருத்துகளை மிக எளிதாக அறிந்து கொள்ளவும் புரிந்து கொள்ளவும் முடியும்.

உலகில் உள்ள எல்லா மதங்களும் நெறிமிக்க மனிதனை உருவாக்குவதையே தலையாயக் கோட்பாடாகக் கொண்டுள்ளன என்றால் அது மிகையில்லை. அந்தக் கோட்பாடுகளைத் தனக்கே உரிய சில நம்பிக்கைகளாலும் சடங்கு சம்பிரதாயங்களாலும் அவ்வப்போது நடைமுறைப்படுத்திக் கொண்டே இருக்கின்றன. அதுபோலதான், கிறிஸ்துவச் சமயமும், உயிர்களிடத்தில் அன்பு செலுத்து, மனித நேயத்துடன் வாழ் என்ற வாழ்க்கைக் கோட்பாடுகளைக் கொண்டிருக்கிறது. அந்தக் கோட்பாடுகள் மக்களுக்குச் சென்று சேர வேண்டும் என்பதற்காக இந்த ஆய்வின் வழி அவை அடையாளம் காணப்பட்டு எளிமைப்படுத்தப்படுகின்றன. வாசகர் மத்தியில் அன்பும் மனித நேயமும் ஊற்றெடுக்கவும் இந்த ஆய்வு முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கொள்ளப்படுகின்றது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

கிறிஸ்துவத் தொன்மம் என்பது குறிப்பிட்ட ஒரு காலகட்டத்தில் காணப்படுகின்ற சிந்தனை மற்றும் சூழல்களை வெளிப்படுத்துவதாகும். இவ்வாய்வின் மூலம் ஆய்வாளர், ஒரு குறிப்பிட்ட சூழலின் காலப் பின்னணி, சமுதாயப் பின்னணி, சமூக உறவுகளின் பின்னணி, பொருளாதாரப் பின்னணி போன்றவற்றை ஆராய முடியும். இவையாவும்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


இந்த ஆய்வின் படைப்பை மேலும், பொலிவூட்டுவதுடனும் எழுத்தாளரின் சிந்தனை திறத்தையும் படைப்பாற்றலையும் கண்ணுற வழிவகுக்கும் என்பது திண்ணம். ஆக, உலகுக்கு அன்பு, மனித நேயம் போன்றவற்றை உருவாக்கும் ஏ.எஸ். பிரான்சிஸ் அவர்களின் படைப்பை உற்றுநோக்கி, பகுப்பாய்வு செய்யவும் இந்த ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது.

## 1.7 ஆய்வு எல்லை

ஆய்வாளர், ஏ.எஸ். பிரான்சிஸ் அவர்களின் புதுக்கவிதைகளை ஆய்வு எல்லையாக நிர்ணயித்துள்ளார். இந்த ஆய்வானது ஆய்வாளர் தேர்ந்தெடுத்துள்ள கவிதைகளில் காணப்படுகின்ற தொன்மக் கோட்பாட்டை உள்ளடக்கியதாகும். மேலும், இந்த ஆய்வானது இலக்கிய நூல்களை உள்ளடக்கிய ஆய்வாகும். இவ்வாய்வு புத்தகங்களையும் கருத்துச் சார்ந்த தரவுகளையும் மட்டுமே உள்ளடக்கியதாகும். ஆய்வாளர் இவ்வாய்வுக்கு உட்படுத்திய புதுக்கவிதைத் தொகுப்புப்பட்டியல் பின்வருமாறு:

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


**அட்டவணை 1.1 ஏ.ஸ்.பிரான்சிஸ் புதுக்கவிதைத் தொகுப்புகள்**

| எண் | கவிதைத் தொகுப்பு | பதிப்பு வருடம் |
|---|---|---|
| 1. | விடியல் விண்மீன் ரூத் | 2011 |
| 2. | மனதில் விழுந்த மழைத்துளி எஸ்தர் | 2011 |
| 3. | என்ன தவம் செய்தேன் | 2007 |
| 4. | பிதா தந்த பூமி | 2007 |
| 5. | ஊசிப்போன உறவுகள் | 1994 |
| 6. | இளமையும் இறைவனும் | 1985 |

மேலும் ஆய்வாளர், கவிதைத் தொகுப்பிலிருந்து திரட்டிய தரவுகளை ஒப்பீடு செய்ய கிறிஸ்துவ மறைநூலான திருவிவிலியத்தைப் பயன்படுத்தியுள்ளார். திருவிவிலியயம் பல வடிவங்களில் காணப்படுகின்றது. அவற்றுள் ஆய்வுக்கு ஏற்ற வகையிலான பொதுமொழிபெயர்ப்பு என்ற திருவிவிலியத்தையே ஆய்வாளர் பயன்படுத்தியுள்ளார். இத்திருவிவிலியம் மணிப்பிரவாள நடையின்றி, வேற்றுமொழிச் சொற்களற்று முழுவதும் தமிழிலேயே இருப்பதால் ஆய்வாளர் பொது மொழிபெயர்ப்பு என்ற திருவிவிலியத்தை ஆய்வுக்குப் பயன்படுத்தியுருக்கின்றார்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


## 1.8 ஆய்வுச் சான்றாதாரம்

இந்த ஆய்வு முதன்மை சான்றாதாரம் மற்றும் துணைமைச் சான்றாதாரம் என இரண்டு வகையான சான்றாதாரங்களைக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. முதன்மைச் சான்றாதாரமாக ஏ.எஸ். பிரான்சிஸ் அவர்களின் புதுக்கவிதைகள் திகழ்கின்றன. துணைமைச் சான்றாதாரமாக இவ்வாய்வினை மேற்கொள்ள தேவைப்படுகின்ற திருவிவிலியம், நூல்கள், தரவுகள், சஞ்சிகைகள், திரட்டேடுகள், மலேசிய இலக்கிய வரலாற்றுப் புத்தகங்கள் போன்றவை விளங்குகின்றன.

## 1.9 கலைச்சொல் விளக்கம்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

ஆய்வாளர் இவ்வாய்வின் சில கலைச்சொற்களை அதன் விளக்கத்திற்கு ஏற்ப பகுத்தளித்துள்ளார். ஆய்வின் சாரமும் கேள்வியும் நன்கு விளங்கும் வண்ணம் இக்கலைச்சொற்கள் விளக்கம் அமையப்பெற்றுள்ளன. மேலும், இக்கலைச் சொற்களானது ஆய்வின் தலைப்பிலிருந்து அதாவது ஏ.எஸ். பிரான்சிஸ் புதுக்கவிதைகளில் கிறிஸ்துவத் தொன்மம் எனும் தலைப்பிலிருந்து பெறப்பட்டவையாகும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


### 1.9.1 புதுக்கவிதை

புதுக்கவிதை என்பது எழுத்தாளரின் சிந்தனையையும் அவர் சொல்ல விழைகின்ற கருத்தையும் மிகவும் எளிதாக, இரத்தினச் சுருக்கமாக, அனுபவித்த உணர்ச்சி மாறாமல், அவ்வுணர்ச்சியை வாசகருக்கும் ஏற்படுத்தும் ஓர் இலக்கிய வகையாகும். மேலும், உணர்ச்சி பொங்க வடிக்கப்படும் இலக்கியத்தில் வழுக்கட்டாயமாகத் திணிக்கப்படும் கவிதை இலக்கணத்தினின்று அப்பாற்பட்டு விளங்குவதே புதுக்கவிதை. புதுக்கவிதை என்பது, எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை என்ற ஆறு கவிதை இலக்கணத்திற்கும் உட்படாமல், சிறந்த சிந்தனை நோக்குடனும், அழகிய கற்பனை வளத்துடனும் சுதந்திரமாகப் படைக்கப்படுவதுமாகும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

### 1.9.2 கிறிஸ்துவத் தொன்மம்

கிறிஸ்துவம் என்பது பல நூற்றாண்டுகளுக்கு முன்னமே தோன்றிய சமயமாகும். தொன்மம் என்பது பொதுவாகக் கூறினால் வரலாறு எனலாம். அதாவது தொன்மம் என்பது குறிப்பிட்ட ஒரு காலகட்டத்தில் நடந்த சம்பவங்கள், கற்பனைக் கதைகள் போன்றவற்றின் வரலாறுகள் ஆகும். மேலும், இவ்வாறான கதைகள், இறைவன், தலைவன், அரசர், ஓர் இனம், சூழல், சம்பவம் என எந்தக் கருப்பொருளை வேண்டுமானாலும் கொண்டிருக்கலாம். ஆனால், ஏதேனும் ஒரு வரலாறு அல்லது மக்கள் மனதளவில் பெரிதும் நம்புகின்ற பண்டைக்கால புராணக்கதை என ஏதோ ஒன்று தொன்மமாகக் கருதப்படுகின்றது. மலேசியத் தேசிய மொழிக்காப்பகம்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


தொன்மம் என்றால் கடந்த கால கதைகள் எனவும் அக்கதைகள் உண்மைச் சம்பவம் மற்றும் கற்பனைச் சம்பவங்கள் ஆகியவற்றைக் கொண்டிருப்பதுமாகும் எனக் கூறுகிறது (ஆசிரியக் குழு, 4ஆம் பதிப்பு, 2007). அதோடு மட்டுமல்லாது, Hashim Awang, (1985) என்பவர், தொன்மம் என்றால் குறிப்பிட்ட ஒரு சமுதாயத்தினரால் வெளிக்கொணரப்படும் மனிதன் மற்றும் தேவதைகள் தொடர்பான உண்மை மற்றும் கற்பனைக் கதைகள் என்று வர்ணித்துள்ளார். ஆக, கிறிஸ்துவத் தொன்மம் என்றால், கிறிஸ்துவத் திருவிவிலியத்தில் இடம்பெற்ற உண்மை மற்றும் கற்பனைக் கதைகள் என்றும் அவை மக்களுக்கு வாழ்வியல் நெறிகளைப் போதிக்கப் பயன்படுத்தப்பட்ட உத்திமுறைகளை உள்ளடக்கியதாகும் எனவும் கொள்ளலாம்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

## 1.10 தொகுப்புரை

இந்த ஆய்வானது, ஏ.எஸ்.பிரான்சிஸ் கவிதைகளை ஆராய்ந்து, அவை நமக்கு அளிக்கக்கூடிய நன்மைகள் என்ன, நமக்கு ஏற்படுத்துகின்ற விழிப்புணர்வு என்ன என்பதை ஆராய்தலையே முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது. அவர் தம் கவிதைகளின் வழிக் கூற விழைகின்ற கருத்துகள் மனித சமுதாயத்தைக் குறிப்பாகப் புதிய தலைமுறையினரை நல்வழிப்படுத்தும் என்பது திண்ணம்.

புதுக்கவிதை என்பது சமுதாயக் கருத்துகளை மிக எளிதில் கூறக்கூடிய ஓர் இலக்கிய வகையாகும். ஆக, புதுக்கவிதை அடிப்படையிலான இவ்வாய்வின் முதல் இயல் பலதரப்பட்டக் கூறுகளைக்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


கொண்டுள்ளது. ஆய்வுப் பின்னணி, ஆய்வுச் சிக்கல், ஆய்வு நோக்கம், ஆய்வு முக்கியத்துவம், ஆய்வு எல்லை, கலைச்சொல் விளக்கம் என அனைத்துக் கூறுகளும் இவ்வாய்வு, முறையாக செயலாக்கம் காண பெரிதும் துணைபுரியும் என்பது திண்ணம்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi